**செய்தி வெளியீடு எண்: 764** **நாள்: 20–12–2011.**

<u>செய்தி வெளியீடு</u>

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று **(20.12.2011)** தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்திலிருந்து (TASMAC) பணி நீக்கம் செய்யப்பட்ட முன்னாள் மாவட்ட மேலாளர்களான எம்.பி.ஏ. பட்டதாரிகளுக்கு மீண்டும் மாவட்ட மேலாளர்களுக்கான பணி நியமன ஆணைகளை வழங்கினார்கள்.

**2003**–ஆம் ஆண்டு நவம்பர் மாதம் முதல் இந்தியாவில் தயாரிக்கப்பட்ட வெளிநாட்டு மதுபானம் (Indian made foreign spirits) மற்றும் பீர் ஆகியவற்றின் சில்லரை விற்பனையை தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம் மேற்கொண்டு வருகிறது. தமிழகத்தில் தற்போது **6725** சில்லரை மதுபான கடைகள் செயல்பட்டு வருகின்றன. மேற்கண்ட சில்லரை விற்பனை கடைகளை மேற்பார்வையிட **33** மாவட்ட மேலாளர் பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டு, அப்பணியிடங்கள் துணை ஆட்சியர்கள் மற்றும் கூட்டுறவு சங்கங்களின் துணை பதிவாளர்களைக் கொண்டு முதலில் நிரப்பப்பட்டது. அதன் பின்னர், கடந்த **2004, 2005**–ஆம் ஆண்டுகளில் எம்.பி.ஏ. பட்டதாரிகள் மாவட்ட மேலாளர்களாக ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்பட்டனர். மேற்கண்ட எம்.பி.ஏ. பட்டதாரிகள் கடந்த ஜுன் **2006**–ஆம் ஆண்டு பணிநீக்கம் செய்யப்பட்டு **33** துணை ஆட்சியர்கள் மாவட்ட மேலாளர்களாக நியமிக்கப்பட்டனர். பணிநீக்கம் செய்யப்பட்ட முன்னாள் மாவட்ட மேலாளர்கள் மீண்டும் தங்களை தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தில் மாவட்ட மேலாளர்களாக நியமிக்க வேண்டி தமிழக அரசுக்கு கோரிக்கை மனுவினை அளித்தார்கள்.

மேற்கண்ட கோரிக்கையை கனிவுடன் பரிசீலித்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், எம்.பி.ஏ. பட்டதாரிகளான பணி நீக்கம் செய்யப்பட்ட **33** முன்னாள் மாவட்ட மேலாளர்களையும் மீண்டும் தமிழ்நாடு

மாநில வாணிபக் கழகத்தில் மாவட்ட மேலாளர்களாக நியமிக்க உத்தரவிட்டார்கள். அதன் அடிப்படையில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று தலைமைச் செயலகத்தில், 7 எம்.பி.ஏ. பட்டதாரிகளுக்கு தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தில் மாவட்ட மேலாளர்களுக்கான பணி நியமன ஆணைகளை வழங்கினார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களிடமிருந்து நியமன ஆணைகளைப் பெற்றுக் கொண்ட எம்.பி.ஏ. பட்டதாரிகள் தங்களை மீண்டும் தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தில் மாவட்ட மேலாளர்களாக நியமித்தமைக்கு தங்களது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொண்டார்கள்.

இந்நிகழ்வின்போது, மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள், உள்துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை முதன்மைச் செயலாளர், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையின் ஆணையர், தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

******

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9.

நாள்: 20.12.2011